VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜீவல்லர்ஸ் A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829
78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To | Printed Matter

If not delivered please return to
**VEDABHARATHY**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

மலர்:3 இதழ்:5 பிப்:2019 ரூ.10/– வருட சந்தா:ரூ.100/–
Volume:3 Issue:5 FEB:2019 Rs.10/- Annual Subs: Rs.100/-



# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

*81/1, மன்னப்பன் தெரு, கோட்டூர், சென்னை – 600 085.*

**போன்: 044 – 2447 4744**

## ஸ்ரீ பகவத்கீதை பாராயண யக்ஞம்

*கடந்த 31.10.2018 முதல் 17.02.2019 வரை சென்னை - 85, கோட்டூர், கதவு எண்.81/1-ல் இயங்கி வரும் ஸ்ரீ மஹாமேரு மண்டலியில் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை உலக நன்மைக்காக ஸ்ரீ பகவத்கீதை பாராயண யக்ஞம் நடைபெற்றுவருகிறது. பாராயணம் செய்ய விழைவோரை ஸ்ரீ மஹாமேரு மண்டலி வரவேற்கிறது.*








# இமைப் பொழுதில்
# கண் முன்
# உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்ப்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

**சிட்டி யூனியன் பேங்க்**

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



**ஸ்ரீ காஞ்சி**
**மஹா ஸ்வாமிகளின் அருளுரை**
**தெய்வத்தின் குரல் 3ம் பாகம்**
**அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்**
**இது தான் அச்வமேதம்**

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

***DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND***



Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**





# வேதபாரதி செய்திகள்
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 3 இதழ்: 5

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

பிப்ரவரி மாதம் வேதபாரதி
செய்திகள் புத்தகம் வெளிவர
உதவிய நல் உள்ளங்கள்

**ஸ்ரீ டி. சூரியநாராயணன்**
**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**
**ஸ்ரீமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி**
**ஸ்ரீ ஸ்ரீகாந்தன்,**
**ஸ்ரீ சௌந்தரராஜன்,**
**ஸ்ரீ விஸ்வநாதன்**
**ஸ்ரீ ஸ்ரீநிவாசன்,**
**வேளச்சேரி ஸ்ரீ நடராஜன்,**
**ஸ்ரீ ஸ்வாமிநாதன்,**
**நங்கநல்லூர் ஸ்ரீ விஸ்வநாதன்,**
**ஸ்ரீ மணிசங்கர்**

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**


# புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு | 4 |
| பிப்ரவரி மாத விசேஷங்கள் | 5 |
| அட்டைப்பட விளக்கம் | 6 |
| பிரதக்ஷிணம் | 8 |
| ஸ்துதிகள் | 10 |
| பீஷ்மாஷ்டமி | 11 |
| தர்மபுரி சிறப்புநிகழ்ச்சி | 13 |
| புதுவை வேதபாரதியின் நம் குடும்பவிழா ஒரு கண்ணோட்டம் | 14 |
| ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஆசீர்வாதம் | 16 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 25 |
| தர்மத்தின் குரல் | 28 |
| வேதபாரதியின் பாவை விழா | 30 |
| சிறப்புக்கட்டுரை | 32 |



**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை
மேற்கண்ட அலுவலக முகவரிக்கு
அனுப்பவும்.

சந்தா புதுப்பிப்பவர்கள்
தங்களுடைய சந்தா எண்ணைத்
தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

புத்தக வடிவமைப்பு
**ரெம்ஸ் பிரிண்டஸ்**
1, லட்சுமிநகர்,
100 அடி சாலை, வேளச்சேரி,
சென்னை - 42. செல்: 8939000064

## ஒரு நிமிடம் உங்களோடு!

ஒரு ஊரில் ஒருவன் தன்னிடம் இருந்த ஒரு குதிரையை வைத்து மற்றவர்களுக்கு குதிரை சவாரி கற்றுக்கொடுத்து வாழ்ந்து வந்தான். அவனுக்கு மனைவியும் ஒரு மகனும் இருந்தார்கள். ஒரு நாள் அவனுடைய மனைவி இறந்துவிட்டாள். திடீர் என்று ஒரு நாள் அவனுடைய குதிரை காணாமல் போய்விட்டது. இதை அறிந்த ஊர் மக்கள் அவனிடம் வந்து "இனி நீ எப்படி வாழ்க்கையை நடத்துவாய்?'' என்று துக்கம் விசாரிக்க ஆரம்பித்தார்கள். இதைக் கேட்ட அவன் "இப்படி நடந்தது நல்லதுக்கு அல்ல என்று யாருக்கு தெரியும்? எனக்கு மற்ற வேலைகளும் தெரியும் அதை செய்து நான் பிழைத்துக்கொள்வேன். என்னைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் நடந்த இந்த சம்பவம் நல்லதுக்காகக்கூட இருக்கலாம்'' என்றான்.

இப்படி சில நாட்கள் நகர்ந்தது ஒரு நாள் தன்னை விட்டு போன குதிரை திரும்பி வந்தது. இதைக் கேள்விபட்ட ஊர் மக்கள் அவனைப் பார்த்து "நீ மிகவும் அதிர்ஷ்டக்காரன் என்று கூறினார்கள். அப்போது அவன் "யாருக்கு தெரியும் இது கஷ்ட காலம் இல்லை என்று, இது எனக்கு கெடுதலாகக் கூட அமையலாம்'' என்றான். குதிரை தன்னை விட்டுபோனபோது நல்லதுக்கு என்று நினைத்தான். குதிரை திரும்பி வந்ததும் கெடுதலாக இருக்கலாம் என்று நினைத்தான்.

ஒரு நாள் அவனுடைய மகன் குதிரையில் ஏரி போகும் போது அது வேகமாக ஓடியதால் அவன் நிலை தடுமாறி ஒரு கல்லின் மேல் இடித்து அவன் கால் முறிந்துவிட்டது. நடக்க முடியவில்லை. அந்த சமயம் அரசரிடமிருந்து "ஒவ்வொரு வீட்டிற்கும் ஒருவர் கட்டாயம் ராணுவத்திற்கு வரவேண்டும்'' என்று உத்தரவு வந்தது. எல்லாருமே தங்கள் மகனை இழக்கவேண்டிவருமே என்று வருத்தப்பட்டார்கள். ஆனால் குதிரைக்காரன் மகனுக்கு கால் இல்லாததால் அவன் தன் மகனை இழக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

இது போல் தான் நம் வாழ்க்கையும். நாம் எப்படி சிந்திக்க வேண்டும் என்று நம் மனது நிச்சயிக்கிறது. நாம் ஒரு



பிரச்சனையை பிரச்சனையாக நினைத்தால் அது நம்மை தளர்த்திவிடும். அதனால் நம்முடைய மனது சக்தி உள்ளதாக இருக்க வேண்டும். திடீர் என்று நம் தலையில் 50 கிலோ எடையுள்ள பொருளை வைத்தால் நம்மால் தூக்க முடியாது. ஆனால் சிறிது காலம் எடை தூக்குவதில் பயிற்சி எடுத்தால் பிறகு சுலபமாக 50 கிலோ எடையைத் தூக்க முடியும். அது போல் நம் மனதில் சக்தி ஏற்படுத்த பயிற்சி வேண்டும். எந்த அனுபவம் வந்தாலும் அதை பகவானின் பிரசாதமாக ஏற்க வேண்டும்.

**- டி. சூரியநாராயணன்**

## பிப்ரவரி மாத விசேஷங்கள்

**(பிப்ரவரி 1/2019 முதல் பிப்ரவரி 28/2019 வரை)**

| தேதி | கிழமை | விசேஷம் |
|---|---|---|
| 2 | சனி | பிரதோஷம் / மாதசிவராத்திரி |
| 4 | திங்கள் | அமாவாசை / மஹோதய புண்யகாலம் / சிரவண விரதம் / அரசமர பிரதக்ஷணம் |
| 6 | புதன் | சந்திர தர்சனம் |
| 8 | வெள்ளி | சதூர்த்தி விரதம் |
| 9 | சனி | வசந்த பஞ்சமி / திருநள்ளாறு சனிபகவான் ஆராதனை |
| 10 | ஞாயிறு | ஸஷ்டி விரதம் / வசந்த பஞ்சமி |
| 12 | செவ்வாய் | ரதஸப்தமி / பீஷ்மாஷ்டமி / மதுரை கூடலழகர் கருடசேவை / மாசி மாத பூஜைக்கு சபரி மலை நடை திறப்பு. |
| 13 | புதன் | ராகு, கேது பெயர்ச்சி விஷ்ணு கார்த்திகை விரதம். |
| 15 | வெள்ளி | ஸ்மார்த்த ஏகாதசி விரதம் |
| 16 | சனி | வைஷ்ணவ ஏகாதசி விரதம் |
| 17 | ஞாயிறு | பிரதோஷம் / சபரிமலை நடை அடைப்பு |
| 18 | திங்கள் | நடராஜர் அபிஷேகம் |
| 19 | செவ்வாய் | மாசி மாதம் / பௌர்ணமி விரதம் / திருக்கோஷ்டியூர் பெருமாள் தேர் |
| 22 | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி |
| 25 | திங்கள் | ராமேஸ்வரம் ராமநாத ஸ்வாமி உற்சவம் ஆரம்பம் |

## அட்டைப்பட விளக்கம்

வருடா வருடம் தை மாதத்தில் வரும் ஸப்தமியை "ரத ஸப்தமி" என்பார்கள்.("ரதம்" என்றால் தேர் "ஸப்த" என்றால் ஏழு). அன்றைய தினம் சூரியபகவான் தெற்கு திசை நோக்கி சென்று கொண்டிருந்த ஏழு குதிரைகள் பூட்டிய தன்னுடைய ரதத்தை வடக்கு திசை நோக்கி செலுத்த ஆரம்பிப்பதால் அந்த நாளுக்கு "ரத ஸப்தமி" என்று பெயர்.



அன்றைய தினம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் காலையில் ஸ்னானம் செய்யும் போது ஏழு எருக்கன் இலைகளில் அக்ஷதை, அருகம் புல், பசுஞ்சாணி, மஞ்சள் பொடி ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து தலையில் வைத்துக்கொண்டு கிழக்கு திசை நோக்கி நின்றுகொண்டு கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே தலையில் தண்ணீரை விட்டுக்கொண்டே குளிக்க வேண்டும்.

ஸப்த ஸப்தப்ரியே தேவி ஸப்தலோகைக் தீபிகே
ஸப்த ஜன்மாஜிதம் பாபம் ஹர ஸப்தமி ஸத்வரம்

யதாஜன்ம க்ருதம் பாபம் மயா ஸப்தஸு
தன்மே சோகஞ்ச மோஹஞ்ச மாகரீ ஹந்த ஸப்தமி

ஏதஜ்ஜன்மக்ருதம் பாபம் யச்ச ஜன்மாந்தார்ஜிதம்
மனோவாக்காயஜம் பாபம் ஜ்ஞாதாஜ் ஞாதே சயே புந:

இதி ஸப்தவிதம் பாபம் ஸ்னாநான் மே ஸப்தஸபதிகே
ஸப்த்வ்யாதி ஸமாயுக்தம் ஹர மாகரி ஸப்தமி

அப்படி குளித்தால் நாம் முன் ஏழுபிறவியில் செய்த பாவங்கள் அகலும் என்று புராணங்கள் கூறுகின்றன.

**ஏழு எருக்கன் இலைகள் வைத்து குளிப்பதன் தாத்பர்யம் :**

பாரதப் போரில் உத்தராயணத்தில் உயிர்விட அம்புப்படுக்கையில் படுத்திருந்தார் பீஷ்மர். உத்தராயணம் வந்த பிறகும் அவருடை உயிர் பிரியவில்லை. அவரைப் பார்க்கவந்த வேதவியாஸரிடம் "வியாஸா, நான் என்ன பாவம் செய்தேன்?



ஏன் இன்னும் உன் உயிர் போகவில்லை? என்று கேட்டார். அதற்கு வேதவியாஸர் "பீஷ்மா பாஞ்சாலியை துச்சாதனன் துகிலுரிந்த போது நீர் தடுக்காமல் இருந்ததுதான் நீர் செய்த பாபம்" என்றார் வியாஸர். கண் எதிரே நடக்கும் ஒரு பாவத்தைத் தன் சக்திக்கு உட்பட்டுத் தடுக்க வேண்டும் என்பது சாஸ்திரம். தான் செய்தது மிகப்பெரிய தவறு என்பதை உணர்ந்த பீஷ்மர் தன் புத்தி, கண்கள், தோள்கள், கால்கள் ஆகியவற்றை சூரியனைக் கொண்டு எரித்துவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

"அர்க்கம்" என்றால் சூரியன் எனப் பொருள். எருக்கன் இலைக்கு "அர்க்க பத்ரம்" என்று பெயர். சூரியனுக்கு உகந்த பத்ரமாக இருப்பதால், பீஷ்மர் புத்தியால் செய்த பாபத்திற்கு உச்சந்தலையில் ஓர் எருக்கு, கண்களுக்கு இரண்டு, தோள்களுக்கு இரண்டு, கால்களுக்கு இரண்டு என பீஷ்மர் உடலில் எருக்க இலைகளைப் பரப்பச் சொன்னார் வியாஸர். பீஷ்மரின் உடலில் சூரிய ஒளி பட பாபம் நீங்கி வைகுந்தம் ஏகினார் என்கிறது புராணம்.

அதன் பிறகு அறிந்தும் அறியாமலும் செய்யும் பாபம் நீங்க எருக்கன் இலைகளை வைத்து ஸ்நானம் செய்வது வழக்கத்திற்கு வந்தது.

இந்த வருடம் ரத ஸப்தமீ 12.02.2019 செவ்வாய் கிழமை நிகழ்கிறது.

தொகுப்பு :
**டி. சூரியநாராணயன்**

வேதபாரதி இதழில் வரும் கட்டுரைகள் குறித்தும், செய்திகள் குறித்தும் வாசக அன்பர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கடிதங்கள் மூலமாகவோ அல்லது ஈ மெயில் மூலமாகவோ தெரிவித்தால் நல்ல ஆலோசனைகளை ஏற்று இதழை இன்னும் சிறப்பாக வெளியிட எங்களுக்கு ஏதுவாக இருக்கும். உடனே உங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**வேதபாரதி - ஆர். வெங்கட்ராமன்**
எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு,
பேபி நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.
Cell : 94434 95950
Email - vedabharathichennai@gmail.com

## பிரதக்ஷிணம்

நம்முடைய பாரததேசத்தின் அடையாளமே கோயில்கள்தான். அதிலும் தமிழகத்தின் அடையாளம். உயர்ந்த அழகிய கோபுரங்களை உடைய கோயில்கள்தான். பெரிய பெரிய கோயில்களை எல்லாம் அந்த காலத்து அரசர்கள்தான் கட்டியுள்ளார்கள். அப்படி கட்டும்போது ஒவ்வொரு கோயிலிலும் ஏதாவது ஒன்றை தனித்தன்மையுடன் கட்டியுள்ளார்கள். பல கோயில்களில் விஞ்ஞானத்திற்கும் புரியாத பல அதிசயங்கள் நிகழ்கின்றன. தமிழகத்தில் மட்டும் 38,000 திற்கும் மேலாக கோயில்கள் இருக்கின்றன. இவற்றில் பல கோயில்களில் பல அதிசயங்கள் உள்ளன.

கோயில்களில் தெய்வங்களை வணங்கியபிறகு கோயிலைச் சுற்றி மூன்று முறை சுற்றிவருவது ஒரு மரபாகும். இதைத்தான் 'பிரதக்ஷிணம்' என்பார்கள்.

**'வேதபாரதி செய்திகள்'** வாசகர்களுக்காக மாதம் ஒரு அதிசயம் நிறைந்த கோயிலை **'பிரதக்ஷிணம்'** வர தீர்மானித்துள்ளோம்.

இந்த மாதம் "அளவுக்களவானவர்" அதிசய கோயிலில் பிரதக்ஷிணம் வருவோம்.

### பிரதக்ஷிணம் (4) - அளவுக்கு அளவானவர்



நாம் கோயில்களுக்குப் போய் நின்றுக்கொண்டு மூலஸ்தானத்தில் இருக்கும் பகவானின் சிலையை தரிசிக்கும்போது அந்த சிலை நம்முடைய உயரத்திற்கோ அல்லது உயரமாகவோ, அல்லது குட்டையாகவோ இருக்கும். தரையில் அமர்ந்து தரிசிக்கும் போது சிலை நம்முடைய உயரத்திற்கோ அல்லது அதைவிட உயரமாகவோ இருக்கும். ஆனால்



நின்றாலும், அமர்ந்தாலும், எதன் மீது ஏறி நின்று பார்த்தாலும் ஒரே மட்டமாகத் தெரியும் அதிசய சிவலிங்கம் தேனி மாவட்டம் சின்னமனூர் "பூலாநந்தீஸ்வரர்" கோயிலில் உள்ளது. இந்த கோயில் உருவாகி ஏறத்தாழ 1100 ஆண்டுகள் ஆகின்றன என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

ஒரு காலத்தில் 'அளநாடு' என்று அழைக்கப்பட்ட இந்த நாட்டை ராஜசிங்க பாண்டியன் என்ற அரசன் ஆண்டுவந்தான். இவன் ஒரு நாள் பூலா மரங்கள் நிறைந்த காட்டிற்கு வேட்டையாட வந்தான். (தற்போது சின்னமனூர் பகுதி) அரசன் அங்கு தங்கியிருந்த போது தினமும் பால் கொண்டுவர ஒரு இடையனை ஏற்பாடு செய்திருந்தான். அவன் பால் கொண்டுவரும் போது ஒரு பூலா மரத்தின் வேர் தடுக்கி பால் கீழே கொட்டிவிட்டது. தினமும் இப்படியே நடக்கும். தகவலறிந்த அரசன் ஆச்சர்யத்துடன் அந்த பகுதியைத் தோண்டிப்பார்த்த போது ரத்தம் பீரிட்டது. அந்த இடத்தை தோண்டிய போது கண்களைப் பறிக்கும் சிவலிங்கம் தோன்றி வானுக்கும் பூமிக்கும் விஸ்வரூபம் எடுத்து நின்றது. அதைக் கண்ட அரசன் சிவபெருமானை வணங்கி "எம்பெருமானே எங்களின் அளவிற்கு காட்சி தந்தால் மிகவும் பெருமை உடையவர்களாயிருப்போம்" என்று கேட்டவுடன் சிவன் மனமிறங்கி அரசனுடைய உயரத்துக்கு ஏற்ப காட்சியளித்தார். அரசன் தரையில் உட்கார்ந்து இறைவனின் கால்களைப் பிடித்ததும் அதே அளவிற்கு சிவனும் சுருங்கினார். அரசன் எழுந்து தன்னை மறந்து சிவனை ஆலிங்கனம் செய்தான். அப்போது சிவன் மீது பதிந்தது அரசனின் முகம். மேலும் அரசனின் வேண்டுகோளின்படி இன்றும் பக்தர்களின் பார்வை எந்த அளவு உள்ளதோ அந்த அளவிற்கே லிங்கம் காட்சி அளிக்கிறார். எனவே இந்த தலத்திற்கு "அளவுக்களவானவர்" என்று பெயர் ஏற்பட்டது.

தேனியில் இருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது "சின்னமனூர்" தினமும் காலை 6 மணி முதல் பகல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் கோயில் பக்தர்களின் வருகைக்காக திறந்திருக்கும்.

தினசரி 4 வேளை பூஜைகள் சிறப்பாக நடைபெறுகிறது.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

## ஸ்துதிகள்

**'ஸ்துதிகள்'** என்பது இறைவனின் பலவித தெய்வீக அம்சங்களை புகழ்ந்து பாடும் பாடல்களாகும். ஏராளமான புராணங்களிலும் மற்ற நூல்களிலும் ஸ்துதிகள் உள்ளன. ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள ஸ்துதிகளிலிருந்து மாதம் ஒரு ஸ்துதியை வாசகர்களுக்காக ''ஸ்துதிகள்'' என்ற இந்த பகுதியில் அளிக்கவுள்ளோம்.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய

### 4. 'த்ருவ ஸ்துதி'

"உத்தான பாதன்" என்ற அரசனுக்கு "சுநீதி" "சுருசி" என்று இரு மனைவியர்கள் இருந்தார்கள். "சுநீதியின்" மகன் பெயர் "த்ருவன்" சுருசியின் மகன் பெயர் "உத்தமன்". அரசனுக்கு சுருசியிடம் பிரியம் அதிகம். அவள் சொல்வதை எல்லாம் கேட்பான். ஒரு நாள் "த்ருவன்" ஆசையுடன் தன் தந்தையின் மடியில் உட்கார வந்த போது அவன் சித்தி "சுருசி" அவனை கீழே தள்ளிவிட்டாள், ''நான் என் தந்தையின் மடியில் உட்காரகூடாதா?" என்று த்ருவன் கேட்டபோது சுருசி " நீ என் மகன் இல்லை. நீ என் மகனாக இருந்தால் அவர் மடியில் உட்காரலாம். அதற்கு நீ பரமாத்மாவை தியானித்து அவர் தரிசனம் பெற்று என் உதிரத்தில் வந்து பிறக்க அனுக்கிரஹம் பெற வேண்டும்" என்றாள். அதைக் கேட்ட த்ருவன் மன உறுதியுடன் நாரதரின் ஆசியுடன் யமுனை நதிக்கரையில் உள்ள மதுவனத்தை அடைந்து பகவான் நாராயணனை நினைத்து கண்களை மூடி கைகளைக் கூப்பி ஒற்றைக்காலில் நின்று கடும் தவம் செய்தான். அவனுடைய தவத்தை மெச்சி பகவான் மஹாலக்ஷ்மியுடன் அவன் முன் தோன்றினார். அதைக் கண்ட துருவன் கண்களில் மகிழ்ச்சி பிரவாகிக்க இரு கைகளையும் உயர்த்தி தூக்கி பகவானை நோக்கி அஞ்சலி செய்து அவரைத் துதிக்க ஆரம்பித்தான். அந்த ஸ்துதிகளே ''த்ருவ ஸ்துதி'' என்று அழைக்கப்படுகிறது.

*(ஸ்ரீமத் பாகவதம் ஸ்கந்தம் 4 - அத்தியாயம் 9 - ஸ்லோகங்கள் 6 முதல் 17 வரை)*

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**



## 2. பீஷ்மாஷ்டமீ

குரு வம்சத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற அரசர் 'சந்தனு' வேட்டையாடுவதில் மிகவும் விருப்பமுள்ளவர். ஒரு முறை வேட்டையாட வனம் செல்லும் போது கங்கையை சந்தித்தான். அவளது அழகில் மயங்கி அவளைத் திருமணம் செய்துக்கொண்டான். இவர்களுக்கு பிறந்த எட்டாவது குழந்தைத்தான் 'பீஷ்மர்'. இவருடைய இயற்பெயர் 'தேவ விரதன்' இவருக்கு 'காங்கேயன் 'கங்கையின் மைந்தன்' என்றும் பெயர்கள் உண்டு. இவர் அரசியலை பிரகஸ்பதியிடமிருந்தும், வேதங்களை வசிஷ்ட முனியிடமிருந்தும், வில்வித்தையை பரசுராமரிடமிருந்தும் கற்றுக்கொண்டவர். வேதவிரதனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்த சந்தனு மகாராஜா தன் மகன்மேல் உயிரையே வைத்திருந்தான். சந்தனு மகாராஜா ஒரு நாள் யமுனை ஆற்றங்கரையில் தேவதைப்போல் அழகுடைய ஒரு செம்படவப் பெண்ணைக் கண்டார். அவளுடைய பெயர் 'ஸத்தியவதி' அவளுடைய அழகில் மயங்கி அவளை திருமணம் செய்து கொள்ள விரும்பினார். ஆனால் அவளுடைய தந்தையோ தன் மகளுக்கு பிறக்கும் குழந்தைக்குத் தான் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்று தன்னுடைய விருப்பத்தைக் கூறினான். இதைக் கேட்ட சந்தனு அதிர்ச்சி அடைந்து 'என்னால் மகன் வேத விரதனுக்கு ஒரு போதும் துரோகம் இழைக்க முடியாது. இதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று கூறி நாட்டுக்குத் திரும்பிவிட்டான். ஆனால் தொடர்ந்து அவனுடைய மனம் அந்த செம்பவடப் பெண்ணையே நினைத்து கொண்டிருந்தது. வேதவிரதன் தந்தையின் துக்கத்திற்கு காரணத்தைப் புரிந்துக்கொண்டு செம்படவனிடம் சென்று தந்தைக்காக பெண் கேட்டார். செம்படவனின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு பத்து திக்குகள், தேவர்கள், ரிஷிகள் கேட்கும்படி 'எனக்கு அரசபதவி வேண்டாம். இன்று முதல் நான் பிரம்மச்சரிய விரதம் பூண்டு என் மூலம் சந்ததிகள் உருவாக்கமாட்டேன் இது உறுதி'



என்று மூன்று முறை சபதம் எடுத்தார். தேவர்கள் பூமாரிப் பொழிந்து 'பீஷ்மா, பீஷ்மா என்றனர். அன்று முதல் அவர் 'பீஷ்மர்' என்று அழைக்கப்பட்டார். 'பீஷ்மர்' என்றால் செயற்கரிய செயலைச் செய்பவர்' என்பது பொருள்.

பீஷ்மர் ஸத்தியவதியை அழைத்துச் சென்று தம்முடைய தந்தையிடம் ஒப்படைத்தார். யாராலும் செய்ய இயலாத அரிய செயலைத் தன் மகன் செய்தான் எனக் கேட்ட சந்தனு மிக்க மகிழ்ச்சி அடைந்து 'வேத விரதன் எந்த நேரத்தில் உயிர் துறக்க விரும்புகிறானோ, அப்பொழுதுதான் அவனுக்கு மரணம் ஏற்படும்' என்ற வரத்தை அளித்தார். மஹாபாரத குருஷேத்திரப் போர்களத்தில் உடல் முழுவதும் காயங்கள் அடைந்த அவர் உத்தராயண புண்ணிய காலத்தில் உயிர்விடத் தீர்மானித்து அம்புப் படுக்கையில் படுத்திருந்து உத்தராயணம் (தை மாதம்) பிறந்த பிறகு அஷ்டமி திதியில் பிராணத்தியாகம் செய்தார். அதனால் அந்ததினம் 'பீஷ்மாஷ்டமி' என்று அழைக்கப்படுகிறது.

மஹா புருஷரான பீஷ்மாச்சாரியாருக்கு சிராத்தம் போன்றவைகள் செய்ய யாருமில்லாமல் திருமணம் ஆகாத நைஷ்டிக பிரம்மச்சாரியாக உயிர் நீத்த அவருக்கு இவ்வுலகில் உள்ள விவாஹம் ஆகி தந்தை உள்ளவர்கள், இல்லாதவர்கள் மற்றும் பிரஹ்மசாரிகள் அனைவரும் 'பீஷ்மாஷ்டமீ புண்யகாலே பீஷ்மதர்பணம் கரிஷ்யே' என்ற சங்கல்பம் செய்து அதற்குண்டான மந்திரத்தைச் சொல்லி சுத்த ஜலத்தால் அர்க்கியம் விடவேண்டும். அப்படிச் செய்வதால் பீஷ்மாசார்யாளின் அருளால் அனைவருக்கும் நீண்ட ஆயுளும் ஆரோக்யமும் கிடைக்கும்.

இந்த வருடம் பீஷ்மாஷ்டமி 12.02.2019 சனிக்கிழமை அன்று நிகழ்கிறது.

தொகுப்பு :

**டி. சூரியநாராயணன்**

**குறிப்பு :**

**வேதபாரதி செய்திகள் புத்தகம் பிரதிமாதம் 12ம் தேதிக்குள் தங்களுக்கு தபால் மூலம் கிடைக்கவில்லை என்றால் 9443495950 / 9445102193 என்ற கைபேசி எண்ணிற்கு தங்கள் முகவரி, பின் கோடு மற்றும் தொலைபேசி எண்ணை SMS செய்யவும். உடன் தபாலில் அனுப்பி வைக்கிறோம்.**

**- வேதபாரதி**



# தர்மபுரி சிறப்பு நிகழ்ச்சி




30.12.2018 ஞாயிறு தர்மபுரி சத்சங்கம் மற்றும் வேதபாரதி சார்பில் அந்தணர் சங்கமம் நிகழ்ச்சி நடைபெற்றது. 100-க்கும் மேற்பட்ட அந்தண குடும்பத்தினர்கள் கலந்து கொண்டனர். ஸ்மார்த்த, வைஷ்ணவ - மாத்வ ஸம்ப்ரதாய ஆசார்யர்களுடன் ப்ராதஸந்த்யா, ஸமிதாதானம் கற்றுக் கொடக்கப்பட்டு, நித்ய கர்மானுஷ்டான வகுப்பு துவங்கியது.

ப்ரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் விடியற்காலையில் வந்திருந்து நிகழ்ச்சியை துவக்கி வைத்து, தனது ஆசீர்வாத வசனம் செய்து நம் ஸமூகம் கடைப்பிடிக்க வேண்டிய அனுஷ்டானங்கள் குறித்தும் வேதமாதாவின் சிறப்பு குறித்தும் உபன்யாசம் செய்தார்கள்.

காலை 10.00 மணிக்கு திருமதி.பிரேமா கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தனது பல வேலைகளுக்கு இடையே வந்திருந்து அருமையான சொற்பொழிவு செய்து அந்தணக் குடும்பங்கள் இருக்க வேண்டிய நிலைகுறித்தும் ஆசார அனுஷ்டானங்கள் குறித்தும் வெகு சிறப்பாக தனது உரையினை நிகழ்த்தி எல்லோருடைய மனதையும் கட்டிப் போட்டார்கள்.

மாத்யானிஹம் முடித்து எல்லோருக்கும் உணவு வழங்கப்பட்டது. அதன் பின் அமுதசுரபி ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணன் சிறப்புரையில் நமது தேசம் குறித்தும், நமது பாரம்பர்யம் குறித்தும், நம் குல பெருமை குறித்தும் பேசி எல்லோருக்கும் நல்ல கருத்துரை வழங்கினார்கள்.

மாலை சாயம்சந்த்யா முடிந்த பின் விழா இனிதே நிறைவேறியது.

திருமண மண்டப உரிமையாளர், வேதபாரதி செயற்குழு உறுப்பினர்கள் வேதபாரதி தர்மபுரி கிளை பொறுப்பாளர் ஸ்ரீ சந்திரமௌலி ஆகியோர்களுக்கு வேதபாரதி மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்தது. பல்லாயிரம் ஆண்டு கால பாரம்பர்யம் காத்திட அணிதிரள்வோம்.

மாம்பலம் ஸ்ரீ குமாரசாமி அவர்கள் விழா நடத்துவதற்கான உதவிகளை செய்தார்கள் அவர்களுக்கு வேதபாரதி சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

# "புதுவை வேதபாரதியின் நம் குடும்பவிழா" ஒரு கண்ணோட்டம்

*30.12.2018* அன்று நடைபெற்ற பயிற்சி முகாமில் காலை முதலே அரங்கம் களை கட்டிவிட்டது.

வேஷ்டி, அங்கவஸ்திரம் அணிந்த பையன்களையும், மடிசார் புடவையில் மாமிகளையும் பார்ப்பதற்கு மனசுக்கு சந்தோஷமாக இருந்தது என்றால் அவர்களின் ஈடுபாடு அசர வைத்துவிட்டது.

ப்ரம்மசாரிகள் வரிசையாக சமிதாதானம் செய்ய உட்கார மந்திர ஒலியும், அக்னிப்புகையும் ரம்யமான சூழலை அமைத்துக் கொடுத்தது. ஒவ்வொரு சாகைக்கும் சாஸ்திரிகள் ஏற்பாடு செய்து சந்த்யாவந்தன மந்திரங்களை விளக்கத்துடன் பயிற்றுவித்து, பின் வேதவிற்பன்னர்களும் குழந்தைகளும், பெற்றோர்களும் அமர்ந்து கலந்துரையாடலில் வடுக்கல் கேட்ட பல நல்ல சந்தேகங்களுக்கு சாஸ்திரிகள் எளிமையான விளக்கங்கள் கொடுத்தார்கள். இந்த நிகழ்ச்சி வடுக்கல், பெற்றோர் மனதில் நித்ய கர்மாக்களை இனியாவது தினம் செய்ய ஒரு தூண்டுகோலாக அமைந்திருக்கும் என்றே தோன்றுகிறது.

பெண்களுக்கான பயிற்சிமுகாம் மிக நேர்த்தியாக நடந்ததாக அவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். திருச்சியிலிருந்து



வந்திருந்த சிறப்பு அழைப்பாளர் ஸ்ரீ சந்த்ரு ஜி, பெண்களுக்கு பிரத்யேகமாக பயனளிக்கக்கூடிய எளிய யோகா பயிற்சிகளையும், சரியான பஞ்ச அங்க நமஸ்கார முறையையும், சின்முத்திரையின் மூலம் ஒரு சில நிமிடங்களிலேயே மனசை அமைதிப்படுத்திக்கொள்ளும் முறையையும் சொல்லிக் கொடுத்தார்.

மற்றொரு சிறப்பு அமைப்பாளர் சென்னையிலிருந்து வந்திருந்த டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன், பெண் குழந்தைகளின் வளர்ப்பு, படிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு, தங்கள் திருமண விஷயத்தில்



ஸ்வதர்மத்தை கடைபிடிப்பது, இவற்றின் மேல் பெற்றோர்கள் காட்ட வேண்டிய கவனம் பற்றி நடைமுறை உதாரணங்களுடன் விளக்கினார். பின்னர் பெண்களுக்கான சில அனுஷ்டான விதிகள் பற்றியும், சுமங்கலி



பிரார்த்தனையின் முக்கியத்துவம், ஏன் செய்ய வேண்டும். எப்படி செய்ய வேண்டும் என்பது பற்றியும் தெளிவாக விளக்கினார். மகளிர் கேட்ட பல சந்தேகங்களுக்கும் தெளிவான பதில்கள் அளித்தார்.

பெண்களிடையே முகாமில் பங்கேற்றதற்கான திருப்தியைக் கொடுத்தது. சென்னை வேதபாரதி அமைப்பின் தலைவர் திரு.வெங்கட்ராமன் நிகழ்ச்சிகள் நேரப்படி நடக்கும்படி வழிநடத்திச் சென்றது, பாண்டி அமைப்பாளர்களுக்கு உதவியாகவும், பயிற்சியாகவும் அமைந்தது என்றே நினைக்கிறோம்.

முத்தாய்ப்பாக அமைந்தது சிறப்பு அழைப்பாளர் கடலூர் டாக்டர். வாசுதேவன் அவர்களின் சிறப்புரை. மந்திரங்களின் மகிமை, அக்னியின் முக்கியத்துவம், ப்ரம்மச்சாரிகளுக்கு சமிதாதானம், கிருஹஸ்தர்களுக்கு பிரும்மயக்ஞம், ஔபாஸனம், வைச்வதேவம், கிருஹதர்மிணிகளுக்கு பர்த்தாவின் கர்மாநுஷ்டானங்களுக்கு உதவ நமது கலாச்சாரத்தை ஒட்டிய கர்நாடக இசை ஸ்லோகங்கள், தேவாரம், பிரபந்தங்கள், புராணங்களை படித்தல், கோலம் போடுவது போன்றவற்றை பயிற்றுவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். இந்த நிகழ்ச்சி எல்லோருக்கும் ஒரு புத்துணர்ச்சியைக் கொடுப்பதாக அமைந்தது.

புதுவை வேதபாரதியின் இந்த ஒருநாள் பயிற்சி முகாம் மிக வெற்றிகரமாக அமைந்ததால் அடுத்து இப்படிப்பட்ட நிகழ்ச்சி எப்போது, என்று எல்லார் மனதிலும் ஒரு ஆவலை தூண்டும் வண்ணம் இனிதே நிறைவேறியது.

- இவண்

**Prof. Dr. S. ஸ்ரீனிவாசன்**

Retd. Principal, Pondicherry.

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# மனதை ஒருமுனைப்படுத்துதல்



துரோணாச்சார்யார் வில்வித்தையின் எல்லா நுணுக்கங்களையும் பட்சபாதம் ஏதுமின்றி பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் கற்றுக்கொடுத்தார். வகுப்புகள் எல்லாம் முடிவடைந்ததும், துரோணர் அவர்களுக்கு ஒரு பரீட்சையை வைத்தார். “அதோ, அந்த மரத்தில் உட்கார்ந்திருக்கும் சிறு பறவையைப் பாருங்கள். நீங்கள் அம்பெய்தி அதைக் கீழே விழச் செய்ய வேண்டும்'' என்று குரு சொன்னார். துரோணர், தனது மாணவர்கள் அனைவரையும் ஒவ்வொருவராக அழைத்து, “இப்பொழுது உனக்கு என்ன தெரிகிறது?” என்று கேட்டார். ஒவ்வொரு மாணவனும், “ஐயா, பறவையும், மரமும், என்னை சூழ்ந்துள்ள சுற்றுப்புறமும் எனக்குத் தெரிகிறது” என்றே பதிலளித்தான். இப்பதிலைக் கேட்ட துரோணர், “இன்னும் நீங்கள் வில்வித்தையில் தேர்ச்சியடையவில்லை” என்று அவர்களிடம் கூறிவிட்டார்.

கடைசியில் அர்ச்சுனனுடைய முறையும் வந்தது. துரோணர் அதே கேள்வியை அர்ச்சுனனிடமும் கேட்டார். அர்ச்சுனன் “மரியாதைக்குரிய குருவே. எனக்குப் பறவை மட்டும்தான் தெரிகிறது. வேறு எதுவும் தெரியவில்லை” என்று பதில் சொன்னான். குரு, அம்பைச் செலுத்தமாறு அவனிடம் கூற, சீடனும் குருவின் ஆணையை நிறைவேற்றினான். பறவையும் கீழே விழுந்தது.

நாம் எடுத்துக்கொண்ட காரியத்திலோ அல்லது நமது இலட்சியத்திலோ நமக்கு இருக்க வேண்டிய மன ஒருமைபாட்டின் பெருமையை இக்கதை நன்கு வலியுறுத்துகிறது. குறிப்பாக, ஓர் ஆன்மீக சாதகனுக்கு, தியானம் பழகும்போது, மனதை இறைவனுடைய வடிவத்தில் ஒருமுகப்படுத்துவது என்பது மிகவும் முக்கியமானதாகும். இருப்பினும், மனம் அலைபாய்வதால் தங்களால் தியானம் செய்ய இயலவில்லை என்றே பலரும் கூறுகிறார்கள். முக்கால்வாசிப் பேர்களுக்கு மனதை இறைவனிடத்தில் நிலைநிறுத்த முடியாமல்



போவதற்கான மிக முக்கியமான காரணம், அவர்களுக்கு தியானத்தில் போதுமானதொரு விருப்பம் இல்லாததேயாகும்.

நூறு ரூபாய் நோட்டுகள் அடங்கிய கட்டு ஒன்றை ஒருவனிடம் கொடுத்து எண்ணச் சொன்னார்கள். மிக்க கவனத்துடன் அக்கட்டை அவன் எண்ணிக் கொண்டிருக்கும் போது, நண்பன் ஒருவன் அவனைக் கூப்பிட்டான். நண்பனின் குரல் அவன் காதில் விழாததால், அவன் நண்பனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. தன்னுடைய வேலையை முடித்த பிறகே அவன் நண்பனைக் கவனித்தான். அப்பொழுது அவன், “என் முழுக்கவனமும் இந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணுவதிலேயே இருந்துவிட்டது. ஏனெனில், எண்ணிக்கையில் ஏதாவது தவறு ஏற்பட்டால், எனக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிடும்” எனறு நண்பனிடம் கூறினான்.

இந்த மனிதன், தான் எடுத்துக்கொண்ட காரியம் மிக முக்கியமானது என்று கருதியதால்தான், அவனால் தன் மனதை முழுமையாக தக்கபடி அக்காரியத்தில் செலுத்த முடிந்தது. இதேபோல், மனதை இறைவனிடத்தில் ஒருமுகப்படுத்துவதிலும் ஒருவன் வெற்றியை அடைய வேண்டுமானால், அவன் தியானம் அதிமுக்கியமானது என்று கருதுவதோடு, தியானம் செய்கையில் மனதை அலையவிட்டால், அதனால் தனக்குப் பெரிய இழப்பு ஏற்பட்டுவிடும் என்பதையும் உணர்ந்திருக்க வேண்டும்.

- முற்றும்.


தங்கள் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் நடக்கும் திருமணங்கள், பிறந்த நாள், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் போன்ற தருணங்களில் பரிசாக வழங்கிட ‘வேத பாரதி’ புத்தக சந்தா செலுத்தி தங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள்.

**ஆண்டு சந்தா ரூ.100/-**

13 மாதங்கள் தங்கள் இல்லம் தேடி வரும்.

அனுப்ப வேண்டிய முகவரி

**வேதபாரதி - ஆர். வெங்கட்ராமன்**

எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு,

பேபி நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.

Cell : 94434 95950

Email - vedabharathichennai@gmail.com

# ஹிந்து குடும்ப சங்கமம் - 2019

## ராஷ்ட்ரிய சேவிகா சமிதி தமிழ்நாடு மற்றும் விவேகபாரதி சென்னை இணைந்து நடத்தும் ஹிந்து குடும்ப சங்கமம்.

**நாள்:**
**10.02.2019**
**ஞாயிற்றுகிழமை**
**காலை 9.00 மணி முதல் 8.00 மணி வரை**

**இடம்:**
**மஹரிஷி வித்யாமந்தீர், மஹரிஷி கார்டன்ஸ்**
**உள்ளே பழைய கல்வி கார்டன்ஸ்**
**28, குருசாமி சாலை,**
**சேத்பட், சென்னை - 600 020.**

- குடும்ப உறவுகளின் மேம்மையை உணர்த்திட
- தம்பதியர் இடையே புரிதலை மேம்படுத்திட
- சமுதாயத்தை உயர்த்த குடும்பங்களின் பங்களிப்பை புரிய வைக்க
- 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு தனி நிகழ்ச்சிகள் உண்டு.
- மதிய உணவு, மாலை தேநீர் உண்டு.

முன்பதிவு செய்ய : **99623 67975 / 99529 59072**
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் :
**தி. சந்திரமௌலி, செல் : 98849 45825**

## சிறப்பு சொற்பொழிவு

வழங்குபவர் : **ஸ்ரீ ரமண பாரதி சைதன்ய ஸ்ரீ**
தலைப்பு : **மஹான்களின் பாதையில் தர்மத்தின் குரல்**
இடம் : **சத்சங்கம்,**
சத்சங்கம் ரோடு, மடிப்பாக்கம்
நாள் : **15, 16, 17 பிப்ரவரி 2019**
வெள்ளி, சனி, ஞாயிறு
நேரம் : **மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை**
தினமும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம் நடைபெறும்.

**அனைவரும் வருக! அனுமதி இலவசம்!**



# 10-வது ஹிந்து ஆன்மீக கண்காட்சியில் வேதபாரதியின் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம குங்கும அர்ச்சனை

**நாள் : 29.01.2019**
**இடம் : குருநானக் கல்லூரி, வேளச்சேரி**







# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000ம் ஆண்டு முதல் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வரும் ஏழை புற்றுநோயாளிகளின் ஒரே புகலிடம்**



V.கிருஷ்ணமூர்த்தி
நிர்வாக அறங்காவலர்

P.ஆகாஷ்ராம்
செயல் அறங்காவலர்

அடையாறு கேன்சர் மருத்துவமனையுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அருளாணைப்படி ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு சிகிச்சைபெற வெளியூர்களிலிருந்து வரும் ஏழை புற்று நோயாளிகளின் தேவையை சிகிச்சை காலம் முடியும் வரை **முற்றிலும் இலவசமாக** பூர்த்தி செய்து வருகிறது. இது தங்களது நிதியுதவி மற்றும் பேராதரவினால் மட்டுமே நடத்த முடிகிறது.



அடையார் புற்று நோய் ஆஸ்பத்திரி ஒரு தனி உலகம். ஆம், கொடிய நோய் மட்டுமல்ல, அதைவிட கொடிய சிகிச்சையும் கூட. இத்தகைய சோதனைக்கு உள்ளான துர்பாக்கியசாலிகளுக்கு நம்பிக்கையும் உதவியும், இருக்க இடமும், உண்ண உணவும் தருவதை ஓர் ஒப்பற்ற தர்மகாரியமாக, காஞ்சி காமகோடி மகாபெரியவர் ஆணையை ஏற்று, பரமபக்தியுடன், இம்மாபெரும் கைங்கர்யத்தை எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு.வி.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஸ்ரீ மாதா டிரஸ்ட் மூலம் செய்துவருவது போற்றுதலுக்கும், புகழுக்கும் அப்பாற்பட்ட, உத்தம பணியாகும். பகவானும், மகாபெரியவாளும் திரு.கிருஷ்ண மூர்த்தி அவர்களுக்கும், அவருக்கு துணையாக பணியாற்றி வரும் அன்பர் களுக்கும் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அளிக்க எம்பெருமானை வேண்டுகிறேன். **திரு.ஏ.எம்.இராஜகோபாலன்** ஆசிரியர், குமுதம் ஜோதிடம்



ஒரு சமூக சேவை நிறுவனத்திற்குள் நுழையும் போது ஓர் ஆலயத்திற்குள் நுழைவது போன்ற உணர்வு ஏற்படுமானால், அதுவே அந்த நிறுவனம் மிகச்சிறப்பாக இயங்கி வருகிறது என்பதற்கு சாட்சி. ஸ்ரீ மாதா டிரஸ்ட் உள்ளே காலடி வைத்த போது அத்தகைய புனித உணர்வைத்தான் அடைந்தோம். கால்கள் தாமாகவே செருப்பைக் கழற்றி ஓர் ஓரமாக வைத்தன.

டாக்டர் **திருப்பூர் கிருஷ்ணன்**, ஆசிரியர், அமுதசுரபி



ஸ்ரீ மாதா டிரஸ்ட் இன்று பார்வையிடலாயிற்று. இங்கு தங்கி இருக்கும் நோயாளிகளை தங்கள் பிள்ளை போல, தாய் தந்தை போல பாவித்து பராமரிப்பது உயர்வானது, உன்னதமானது, சிறப்பானது. இப்பணி யாராலும் செய்ய முடியாதது, இதை ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாகி சிறப்பாக நடத்துகின்றார்.

**முனைவர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான்,** தருமபுரி ஆதீனம்.



SANDEEP RAI RATHORE, IPS, Additional Director General of Police, TN-STF

Visited this very worthy Institution today. The work being done by Sri Matha Trust is in service of humanity and beyond words. The cause is inspiring and humbling. Have learnt a lot today and would carry the virtue. Gob Bless. Jai Hind.

Justice **K.Ravichandrababu,** Chennai - 20.

சிறந்த மனித நேயமிக்க தொண்டு. இந்த மக்கள் சேவையே மகேசன் சேவை. என்றென்றும் தொடர எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுகிறேன்.



எதிர்காலத்தைப் பற்றி ஓர் நம்பிக்கை இங்கு வந்த பிறகு உறுதிப்படுகிறது. மோசமான ஒரு சூழ்நிலை வெளி உலகில் தென்பட்டாலும், இதுபோல நல்ல உள்ளங்கள் அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் தொண்டு புரிவது நமக்கும் ஊக்கம் தருகிறது.

**இல.கணேசன்,** மாநிலங்களவை உறுப்பினர்



மனதுக்கு நிறைவு தரும் அருமையான இடம். திரு.கிருஷ்ண மூர்த்தியின் சேவை அளவிட முடியாது. நோய் நொடியில்லாமல் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நூறாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறேன். **டெல்லி கணேஷ்,** திரைப்பட நடிகர்



தர்மத்தை நீ காப்பாற்றினால் தர்மம் உன்னைக் காப்பாற்றும் என்பது கீதையில் பகவான் சொன்னது. மாதா டிரஸ்ட் சேவை மகத்தானது. இது மேலும் வளர வேண்டும் என்று கடவுளை ப்ரார்த்திக்கிறேன்.

**துக்ளக் சத்யா,** மடிப்பாக்கம்



உள்ளதை கொடுப்பது தர்மம். உள்ளதையெல்லாம் கொடுப்பது தானம். உள்ளதையும் உள்ளத்தையும் கொடுப்பதுதான் மனித நேயம். இந்த தர்மசாலாவில் இதை கண்கூடாக பார்க்கிறேன்.

**உரத்தசிந்தனை உதயம் ராம்,** சென்னை



திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தொண்டு அற்புதமானது. இது ஒரு பெரிய தவம். **ம.வீரபாகு,** ஆசிரியர் - விஜயபாரதம்



வாழ்வதற்கு பொருள் வேண்டும் என எதிர்பார்க்கும் இந்த உலகில், வாழ்வதிலும் பொருள் வேண்டும் என்று நம்புகிற ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாகி திரு.கிருஷ்ணமூர்த்தி, பொருள்மிகு வாழ்க்கை வாழ்கிறார். இங்கு உள்ளோரை சந்தித்தது புதிய அனுபவம். உள்ளம் நெகிழ்ந்தது.

**லேனா தமிழ்வாணன்,** படைப்பாளர், சென்னை



தினமும் ஓர் உயிர்க்கு நல்லது செய்தால் எப்பவும் ராஜாவாக இருக்க லாம் என்று என் அம்மா சொல்வார்கள். கிருஷ்ணமூர்த்தி ஐயா தினமும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு நல்லது செய்கிறார். அவர் ஒரு சக்கரவர்த்தி. பாலம் **கல்யாணசுந்தரம்**

பத்திரிகையாளர், சமூக சேவகர்



**விட்டலதாசன், (JKD)** ஸ்ரீ பாண்டுரங்க பஜனாஸ்ரமம், கோவிந்தபுரம் - 612 101. இதுவரை பார்த்த தர்மங்களில் இதுபோன்ற தர்மத்தை பார்த்தது இல்லை. இது மேன்மேலும் வளர ஸ்ரீ ருக்மணி விட்டலை ப்ரார்த்திக்கிறேன்.



**கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்**
**ஆசிரியர் - கலைமகள்** இங்கு வந்த பிறகு எனக்கு தோன்றியது ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாருக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ண வேண்டும் என்பதுதான். சுத்தமான சேவை !!



**சிவசங்கரி, எழுத்தாளர்**
மனது நிறைந்திருக்கிறது; எப்பேர்பட்ட உன்னதமான சேவை. நிர்கதியாய் நிற்கும் புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வீடு போல் நாங்கள் இருக்கிறோம் என்ற நம்பிக்கையைத் தருவது வார்த்தைகளால் பாராட்ட இயலாத தொண்டு. கடவுள் இத்தொண்டர்களுக்கு எல்லா பாக்கியங்களையும் தர வேண்டுகிறேன்.

**ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவளிக்க உதவிடுங்கள்.**
**நமக்கும் நமது சந்ததியினருக்கும் காலத்தால் அழியாத புண்ணியத்தை சேர்த்திடுங்கள்.**





"நம்மைக் காட்டிலும் உலக நன்மையே பெரிது" என்ற பொதுநலம் அனைவருக்கும் உண்டாக வேண்டும்.
ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அமுத வாக்கு.

தங்களது நன்கொடையை **Sri Matha Trust** என்ற பெயரில்
காசோலை / வங்கி பணப்பரிவர்த்தனை (NEFT) / பணம் / மனியார்டர் மூலமாகவோ செலுத்தலாம்

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவை ஏற்கலாம்
ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவின் ஒரு பகுதியை ஏற்கலாம்
ரூ.5,000/- நிதியளித்து மதிய உணவு / இரவு உணவு அல்லது
ரூ.3,000/- நிதியளித்து காலை உணவின் ஒரு பகுதியை ஏற்கலாம்

You are welcome to send your contribution to

| Account Name | Bank Name | Branch |
|---|---|---|
| SRI MATHA TRUST | INDIAN OVERSEAS BANK | GANDHI NAGAR, CHENNAI-20 |
| Current A/c No. : 163502000001090 | | IFSC Code : IOBA0001635 |

You may also deposit your donation in any IOB Branch for crediting into our account. Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act. Donate liberally and reduce your income tax liability. After doing this benevolent act kindly SMS your postal mailing address or e-mail the donation details to enable us send our receipt.

Sri Matha Trust, Rajasthani Dharmasala, Old Cancer Institute Premises, Gandhi Nagar Canal Bank Road, Adyar, Chennai - 600 020. Tel: 044-2442 0727
Mobile: 94440 01065, 93810 20727, 90032 47857 Email: vkrishnamoorthy.smt@gmail.com
Regd. Office: "Natha Kamalam" 1-A, Periyazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 59.




## வேதபாரதியின் சிறப்பு நிகழ்ச்சி

04.01.2019 வெள்ளிக்கிழமை அன்று வேதபாரதி அமைப்பின் வாயிலாக பள்ளிச் சிறார்களுக்கு உணவு தொடர்பான விழிப்புணர்வு வகுப்பு சென்னை மருத்துவர் டாக்டர் கே.சிவராமன் அவர்களை வரவழைத்து, திருவான்மியூர் சங்கர வித்யாலயா பள்ளியில் 10.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், துரைப்பாக்கம் ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளியில் 11.30 மணி முதல் 12.30 மணி வரையிலும் உணவு குறித்து விழிப்புணர்வு வகுப்பு நடத்தப்பட்டது.

டாக்டர் அவர்கள் தனது உரையில் ரசாயணம் இல்லாத இயற்கை நல்ல உணவு குறித்து சிறந்த கருத்துக்களை குழந்தைகளுக்கு மிக நல்ல முறையில் எடுத்துக் கூறினார். பதப்படுத்தப்பட்ட, ரசாயன கலப்பு உள்ள வெளிநாட்டு, உள்நாட்டு உணவு வகைகள் நம் உடலுக்கு செய்யக் கூடிய கெடுதிகள் பற்றியும் நம் பாரம்பர்ய உணவுகள் நமக்கு கொடுக்கக்கூடிய சுகாதார, உடலுக்கு தேவையான, நல்ல ஆரோக்யமான நல்ல விஷயங்கள் குறித்தும் வெகு நேர்த்தியாக எடுத்துச் சொல்லி புரிய வைத்தார்கள். மேலும் கேள்வி பதில் நிகழ்ச்சியும் மிக சிறப்பாக நடந்தது. தனது பேச்சாற்றலால் குழந்தைகளை தன் வயப்படுத்தி நல்ல விஷயங்களை கொடுத்து, எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காமல் தனது நேரத்தை கொடுத்த டாக்டர் அவர்களுக்கு, இரண்டு பள்ளி நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள், குழந்தைகள், வேதபாரதி உறுப்பினர்கள் அனைவரும் நன்றி கூறினார்கள்.

ஆசிரியர்.

## ஸ்ரீ காஞ்சி மகானின் பாதுகை மகிமைகள் டிஜிடல் புத்தகம்

இந்தப் புத்தகத்தை இப்போது மிகவும் சுலபமாக வீட்டில், அலுவலகத்தில், பயணங்களில் படித்துப் பயன்பெறும் வகையில் ஆன்லைன் வசதி செய்யப்பட்டுள்ளது. டிஜிடல் புத்தகமாக உங்கள் கணினியில், கை பேசியில் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு நீங்கள் செய்ய வேண்டிய சுலபமான வழி இதுதான். கூகிள் சர்ச்-ல் KanchimahaninPadhugaiMahimaigalஎன்று டைப் செய்தால் போதுமானது. Amazon, Scribd, www.pustaka.co.in என்று பல்வேறு தளங்களின் மூலம் பதிவிறக்கம் செய்து கொண்டு வசதியாகப் படிக்க முடியும்.

உங்கள் அயல்நாடு வாழ் சொந்தங்களிடமும் இந்தச் செய்தியைக் கொண்டு சேர்த்து மகா பெரியவரின் அருளாசியைப் பெறுங்கள்.

## வேதபாரதி
## வஜ்ஜிரகிரி பௌர்ணமி கிரிவலம்

வேதபாரதி உறுப்பினர்கள் 20.01.2018 அன்று இரண்டு வேன்களில் மதியம் புறப்பட்டு அச்சிறுப்பாக்கம் 3.30 மணிக்கு சென்று அடைந்தனர். வேதம் ஓதி விண்ணவர் தொழும் பாவங்களைப் போக்கும் ஸ்ரீ பசுபதீஸ்வரர் அருள்பாலிக்கும் வஜ்ஜிரகிரி மலையை வலம் வந்தால் வாழ்வில் எல்லா வளங்களையும் தரும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

1500 ஆண்டுகள் பழமை வாய்ந்த 306 படிக்கட்டுகளைக் கொண்ட மரகதாம்பிகை உடனுரை பசுபதீஸ்வரர் மலைக்கு மேல் அருள் பாலித்து வருகிறார்கள். மாலை 4.30 மணி வரை வேதபாரதி அன்பர்களால் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம் நடைபெற்றது. அதன் பின் 1000க்கும் மேற்பட்ட அன்பர்கள் பங்கேற்று வஜ்ரகிரிமலை பௌர்ணமி கிரி வலம் இசை வாத்யம், மந்திர கோஷங்களுடன் ஊர்வலமாக கிரிவலம் ஆரம்பித்து கரடுமுரடான பாதையில் அதிக வெளிச்சம் இல்லாத போதும் பக்தர்கள் தங்களது உற்றார் உறவினர்கள், நண்பர்களுடன் கிரிவலம் வந்தார்கள்.

இரவு 9.00 மணிக்கு மலை அடிவாரம் வந்து நிறைவு செய்தார்கள். 4 1/2 மணி நேரம் நடந்து வந்த கலைப்போ, சோர்வோ இல்லாமல் நல்ல நோக்கத்தோடு பக்தியுடன் நடந்ததால் எல்லோரும் உற்சாகமாக இருந்தார்கள்.

ஹிந்து ஸமுதாய மக்கள் மிக ஒற்றுமையுடன் இருக்க வேண்டியது அவசியம். மாற்று மதத்தவர்களையும் மதிக்கும் பேருள்ளம் கொண்ட நம் ஹிந்து ஸனாதன மக்கள் தொடர்ந்து விழிப்புடன் இருந்து நம் கோவில்களில் பிரார்த்தனை செய்து மத மாற்றம் என்கிற வன்கொடுமை நிகழாமல் இருக்க நாம் எல்லோரும் முயற்சி செய்வது மிகவும் அவசியம்.

எல்லோரும் எல்லாமும் பெற்று வாழ வஜ்ஜிரகிரி மலை கிரிவலம் செல்வோம், நன்மைகள் பல பெறுவோம்.

-ஆசிரியர்.



# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 2 பகுதி - 30

'அச்சம் தான்' மனிதனின் முதல் எதிரி. பேறு காலத்திலேயே தாய்க்கு பயம் உண்டு பண்ணும் விஷயங்கள் பல நடக்கின்றன. அன்று இந்த பயத்தை யாரும் ஏற்படுத்தவில்லை. காரணம் ஊடகங்கள், இதைப்பற்றி பேசவேயில்லை. அதே போன்று வயதில் மூத்த பெண்கள் பிரசவ அனுபவத்தை லேசாக இலை மறைவு, காய் மறைவாக குறிப்பிடுவார்கள். அதனால் தாய்மார்களுக்கு பயம் என்பது தெரியாது.

ஆனால் இன்று 'கூகுள் சாமி'யும், வெளிநாட்டுப் புத்தகங்களும் பல விஷயங்களை பெண்களை நோக்கி அனுப்பிக் கொண்டேயிருக்கின்றன. அதை வைத்து தான் இன்று குழந்தைபிறக்க வைக்கப்படுகிறது.

அதனால் இன்று குழந்தைகளின் உள்ளார்ந்த மனதில் ஏதோ ஒருவித பயம் உள்ளது. ஆனால் பெற்றோர்கள், பள்ளிகள், சமூகம் அதை கவனிப்பதில்லை. காரணம் பல்வேறு விஷயங்கள் அவர்களை நோக்கி சென்றுக் கொண்டேயிருக்கின்றன.

பத்து வயதிலிருந்தே தான் அழகாக இல்லை, இனி அழகே எனக்கு கிடைக்காது எனும் பயம், எனக்கு மீசை வளராதோ என்று 12 வயது பாலகனுக்கு பயம், பரீட்சை நாள் நெருங்க, நெருங்க அனைவரும் 'அட்வைஸ்' மழை பொழிய ஏற்படும் பயம் என்று சாதாரண பயங்களைத் தாண்டி, "என்னை எந்த பெண்ணுக்கும் பிடிக்காது'' ''என்னை எந்த ஆணுக்கும் பிடிக்காது" எனும் Low Self Esteem ஆரம்பித்துவிடுகிறது.

இன்றைய டீனேஜர்களின் பெரும் பயம் பெற்றோர்களை திருப்திப்படுத்த இயலாமல் போய்விடுமா? எனும் பயம் நிறைய உள்ளது. காரணம் பெற்றோர்களின் எதிர்பார்ப்பு நாளும் பொழுதுமாகக் கூடிக்கொண்டே போகிறது.

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்ற யவை" (குறள் 400 அதிகாரம் - கல்வி)

எத்தனை பேருக்குக் கொடுத்தாலும் கல்விச் செல்வம் குறையாது. அதனால் அழிவில்லாத சிறப்புடைய செல்வம் கல்வியறிவு ஒன்றுதான். மற்றச் செல்வங்கள் அப்படி ஒருவரிடத்தில் குறையாமலும், நீங்காமலும் தங்கியிருப்பதில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

ஒவ்வொரு பெற்றோரும் இதைப் புரிந்து தான் செயல்படுகின்றனர். ஆனால் பல்வேறு காரணங்களுக்காக கல்வியறிவு என்பதை மதிப்பெண்களோடு இணைக்கத் துவங்குகின்றனர்.

மதிப்பெண்கள், வாக்குவாதம், கல்வியறிவும் ஒன்றில்லை என்று எப்படி பெற்றோர்களிடம் கூறுவது, புரிய வைப்பது சுலபமல்ல என்று அனைவருக்கும் தெரியும்.

மதிப்பெண்களை வாங்கிப் பெற்றோரை பெருமைக் கொள்ள வைப்பவர்கள் தான் நல்ல மாணவன் / மாணவி என்றும், மற்றவர்கள் எல்லாம் உபயோகமற்றவர்கள் எனும் எண்ணம் மிக அதிகமாக உள்ளது.

இந்த எண்ணம் சமூகத்திடம் பெருகும் போதும், பள்ளியில் அதிகரிக்கும் பொழுதும், கடைசியில் தன் பெற்றோர்களிடம் கூடும் பொழுது தான் பையன் / பெண்ணுக்கு பயம் கூடுகிறது.

இந்த பயத்தை அவன் / அவள் வாழ்நாள் முழுவதும் அனுபவிக்க நேர்கையில் மனதில் கோபமும், வெறுப்பும் ஏற்படுவது சகஜம் தானே. படிப்பிற்காக பயம் என்பது பெற்றோர்களிடம் கூடாது.

மாணவப் பருவம் முழுவதும் மகிழ்ச்சியுடன் கூடியப் பொறுப்புணர்ச்சி தான் சிறுவர் - சிறுமியர்களிடம் இருக்க வேண்டும் என்பதை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் பய உணர்வு பல நன்மைகளையும் அளிக்கக்கூடியது என்பதையும் உளவியல் ரீதியாக பெற்றோர்கள் புரிந்த கொள்ள வேண்டும்.

பயத்தில் நன்மைகூட உண்டா என்று நீங்கள் அதிசயப்படுவதைக் காணமுடிகிறது.

ஒரு முறை அக்பரிடம் ஒரு அறிவாளி "என் வேலைக்காரன்



பெருந்தீனிக்காரன்! அவனை ஒருமாதம் உங்களிடம் விட்டுச் செல்கிறேன். அவன் வேலை, உடற்பயிற்சி, நடைபயிற்சி என்று எதுவும் செய்யக்கூடாது. ஆனால் ஒரு கிலோ எடைக் கூட அவன் கூடாமல் இருக்க வேண்டும்'' என்று சவால்விட்டார். எப்பொழுதும் போல பீர்பால் பிரச்சனையைக் கையிலெடுத்தார்.

ஒருமாதக் கடைசியில் அந்த வேலைக்காரனின் எடை அப்படியே இருக்க அக்பர் பீர்பாலிடம் "இது எப்படி சாத்தியம் மூன்று வேளையும் பலமான விருந்து கொடுத்தாயே" என்று கேட்டார்.

''அந்த வேலைக்காரன் அருகில் ஒரு சிங்கக்கூண்டை வைத்துவிட்டு, அதைப் பூட்டவில்லை என்றேன். அச்சம் அவன் உடலில் ஊட்டச்சத்தியை வளர்க்காமல் வைத்திருந்தது'' என்றார் பீர்பால்.

அச்சம், வீணான பயம், தேவையற்ற சுடுச்சொற்களைத் தவிர்த்து விடுங்கள். உங்கள் குழந்தைகளிடம் பேசி புரிய வைக்க முடியும்.

தொடரும்....

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி.**

---


உ

**மாடம்பாக்கம் ஜனகல்யாண்**

**சென்னை - 600 126.**

**25ம் ஆண்டு வெள்ளிவிழா**

**ஷமஷ்டி உபநயன பிரம்மோபதேச கைங்கர்ய வைபவம்**

**இடம் : ஸ்ரீ சங்கரவித்யாலயா பள்ளி,**
சேலையூர், கிழக்கு தாம்பரம், சென்னை - 59.

**16.02.2019**

மாலை 6.00 மணி முதல் 7.30 மணிவரை **ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின்** விஜய அருளுரை வழங்க உள்ளார்கள்.

**17.02.2019**

**காலை 5.00 மணி முதல்**
வைதீக வைபவம், மங்கள இசையுடன்
பாதுகை அபிஷேகம் உதக சாந்தி, வேத பாராயணம்

**காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை**
உபநயனம், பிரம்மோபதேசம், அக்ஷதை, ஆசீர்வாதம்

**10.00 மணிக்கு**
அறுசுவை அன்னப்பிரசாதம்.

**அனைவரும் வருக! அருளாசி பெறுக!!**

# தர்மத்தின் குரல்

## *அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

## 2.13. அடுத்த பிறவிக்குக் கர்மாக்களின் மாற்றம்

## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*"விஞ்ஞானம் இக்கேள்விகளுக்குப் பதில் சொல்லவில்லை. இதற்குச் சாஸ்திரத்தின் பதில் தான் என்ன?"*

சாஸ்திரம் இப்படி விளக்கமளிக்கிறது. ஒவ்வொருவரும் தன் முந்தைய பிறவிகளில் நிறைய கர்மாக்களைச் செய்திருப்பார்கள். இந்தக் கர்மாக்களைச் செய்வது, ஸ்தூல சரீரம் என்பது தெரிந்த விஷயம். இருப்பினும், அது ஜடமானதால், அது தானாகவே செயல்பட முடியாது. உடலுக்குள்ளே இருக்கிற, ஆனால் உடலிலிருந்து வேறுபட்ட சில சக்திகளே, ஸ்தூல சரீரத்தின் செயல்களுக்குக் காரணம் என்பது சாஸ்திரத்தின் துணிவு. இதில் மூன்று விதமான சக்திகள் உள்ளன.

1. மோட்டார் செயல்படுவது போன்ற ஐந்து கர்ம இந்திரியங்கள்.
2. ஐம்புலன்கள், புத்தி ஆகியவை அடங்கிய மனம்.
3. பஞ்சப்ராணன் எனப்படுகிற சுவாசத்தின் ஐந்து நிலைகள்.

இம் மூன்றும் சேர்ந்து சூக்ஷ்ம சரீரம் எனப்படுகிறது. இவ்வாறு கண்ணிற்குப் புலப்படுகிற ஸ்தூல சரீரத்தின் செயல்களுக்கு இந்த சூக்ஷ்ம சரீரமே காரணமாகிறது. சூக்ஷ்ம சரீரம் கிரியைகளைச் செய்து கொண்டே இருப்பதால், அதன் மீதே தொடர்ச்சியான எதிர் விளைவு ஏற்படுகிறது. ஒரு மின் விசிறியிலுள்ள மோட்டார் அதைச் சுற்றச் செய்வதன் எதிர்விளைவாக வெப்பமடைவதைப் போல ஒவ்வொரு செயலுக்கும், சிறியதோ, பெரியதோ, அற்பமானதோ, நல்லதோ, கெட்டதோ, இரண்டும் இல்லாததோ, எல்லாவற்றிற்கும் ஓர் எதிர் விளைவு ஏற்படுகிறது. நொடிக்கு நொடி இந்த எதிர்விளைவுகள் சேர்ந்து கொண்டே போகின்றன. இறுதியாக, இறப்பு வருகிறபோது , அந்த மனிதன் படுக்கிறான். முதலில் கர்மேந்திரியங்களின் செயல்கள் நின்று போகின்றன.



அவ்வாறு நின்று போகும் செயல்களில் ஒன்று, வாக்கு எனப்படம் பேசும் திறன், கர்மேந்திரியங்களில் சேர்ந்துள்ள எதிர் விளைவுகளின் ஒரு பகுதியாக, மோட்டார் உறுப்புகள், குறிப்பிட்ட உருவத்தை அடைந்து, அதிலேயே உறைந்து விடுகின்றன. இவ்வாறு உறைந்துவிட்ட அங்க வடிவங்களெல்லாம் பொதுவாக வாக்விருத்தி எனப்படுகின்றன, அதன்பிறகு அந்த மனிதனால் பேசவே முடியாது. அவனுக்கு என்ன நடக்கிறது என்று அவனால் சொல்ல முடியாது. இந்த வாக்விருத்தி பின்னர் மனதைச் சேர்கிறது. அவனைச் சூழ்ந்துள்ளவர்களெல்லாம், அவரின் பேச்சு நின்றுவிட்டது, இருந்தாலும் நடப்பதைப் புரிந்து கொள்கிறார், அவருக்கு நம்மை அடையாளம் தெரிகிறது என்று சொல்கிறார்கள். அதன் பொருள் என்னவென்றால் மனது, ஞானேந்திரியங்களின் மூலமாக இன்னும் வேலை செய்து கொண்டிருக்கிறது என்பதே. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, ஏற்கனவே வாக்விருத்தி வந்தடைந்து விட்ட, இந்த மனதும் ஞானேத்திரியங்களும், சேர்த்து வைக்கப்பட்ட எதிர் வினைகளின் ஒரு பகுதியாக, இறுதி உருவைக் கொள்கின்றன. பின், அதே வடிவில், நிலையில் அது உறைந்து விடுகிறது. மனதின் இந்த இறுதி உறைநிலை மனோ விருத்தி எனப்படுகிறது. பின்னர், அது பிராணனைப் போய்ச் சேர்கிறது. அப்பொழுது அவனைச் சுற்றியுள்ளவர்கள் அவர்களை அடையாளம் காண்பதையும் நிறுத்திவிட்டார். ஆனால் இன்னும் மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார் என்று சொல்கிறார்கள். அப்பொழுது, அவர்கள் கங்கை தீர்த்தத்தைக் கொண்டு வந்து, ஒரு துளியை அவன் வாயில் ஊற்றுகிறார்கள். அவர் அதை விழுங்குகிறார். ஏனெனில் விழுங்குவது பிராணனின் வேலையாகும். பிறகு, நாளாவட்டத்தில், வாக்விருத்தி, மனோவிருத்தி ஆகியவற்றை ஏற்கனவே தன்னுள் அடக்கி விட்ட பிராணன், சேர்ந்துள்ள எதிர்விளைவுகளின் ஒரு பகுதியின் விளைவாக ஒரு இறுதி வடிவைப் பெறுகிறது.

தொடரும்...

# வேதபாரதியின் பாவை விழா - 2019

வேதபாரதி மற்றும் ஸ்ரீ சங்கரா எஜுகேஷனல் ட்ரஸ்ட் இணைந்து கடந்த 5 வருடங்களாக பள்ளிச்சிறார் சிறுமியர்களுக்கு திருப்பாவை - திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டிகளை நடத்தி வருகிறது. 40-க்கும் மேற்பட்ட பள்ளிகளுக்கு சுற்றறிக்கையும், திருப்பாவை திருவெம்பாவை புத்தகங்களும் தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. பள்ளிகளிலிருந்து தேர்வு செய்யப்பட்ட குழந்தைகள் வேதபாரதி மெயிலுக்கு பட்டியல் அனுப்பிவைத்தார்கள். அதன்படி தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளுக்கு நுழைவுச்சீட்டு அனுப்பப்பட்டது.




06.01.2019 ஞாயிறு அன்று காலை 8.30 மணிக்கு குழந்தைகள் வரத்தொடங்கிவிட்டார்கள். பட்டாம் பூச்சிகளும் சிட்டுக்குருவிகளும் வருவது போல் குழந்தைகள் சாரை சாரையாக வந்த வண்ணம் இருந்தது. ஆண்டாள் எல்லா குழந்தை உள்ளங்களிலும் குடிகொண்டு குழந்தைகள் தங்களை தயார் செய்து கொண்டு இருந்தார்கள். அரங்கத்தார்கள் அனைவரும் வந்துவிட்டார்கள்.

வேதபாரதி உறுப்பினர்கள் நடுவர்களையும், குழந்தைகளையும் வரவேற்று அவரவர்கள் அறைகளில் அமரவைக்கப்பட்டார்கள். சரியாக 9.30 மணிக்கு 400க்கும் மேற்பட்ட குழந்தைகள் மனப்பாடப்போட்டி, இசைப்போட்டி,



சிறப்பு மனப்பாட போட்டிகளில் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிக்கொண்டுவந்தார்கள்.

திருச்சி சந்திரசேகர் ஜி அவர்கள் குழந்தை வளர்ப்பு, தேக ஆரோக்யம் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார்கள். மதுரை ஸ்ரீ ரமணபாரதி சைதன்ய ஜி அவர்கள் தேசபக்தி தெய்வ பக்தி குறித்தும் ஆண்டாள் குறித்தும் மிக அழகாக எடுத்துரைத்தார்கள்.

எல்லா பெற்றோர்களுக்கும் தேனீர் வழங்கப்பட்டது. குழந்தைகளுக்கு பிஸ்கட், பால் வழங்கப்பட்டது. சரியாக 12.30 மணிக்கு வேளச்சேரி வாக்கர்ஸ் நிறுவன உரிமையாளர் ஸ்ரீ முத்துமாலை கலந்து கொண்டு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.



எல்லோருக்கும் பிரசாதமாக நங்கநல்லூர் பவமான அன்னதான ட்ரஸ்ட் மூலம் சிறப்பான உணவு வழங்கப்பட்டது.

அல்லும் பகலும் அயராது உழைத்த வேதபாரதி அன்பர்கள் தேனிக்கள் போல பணியாற்றி எல்லா பொதுமக்களிடமும் பள்ளிகளிலும் குழந்தைகளிடமும் நன்மதிப்பும், பாராட்டும் பெற்றார்கள். எல்லோரும் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ பிரார்த்திப்போம்.

-வேதபாரதி

**ஜாதக பரிவர்த்தனைக்கு அனுகவும் :**

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
|---|---|
| 9444140119 | 7092199447 |

# 'காதலர்தினம்' – சிறப்புக் கட்டுரை

## அன்பை விதைப்போம்! அன்பையே அறுவடை செய்வோம்

பிப்ரவரிமாதம் வந்துவிட்டது! "வாலண்டைன்ஸ் டே"-யும் வந்துவிடும்!

இந்து பாரம்பர்யக் குடும்பங்கள் இது பற்றி முன்கூட்டியே சிந்தித்து நம் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுப்போம்.

இது மேற்கத்திய கலாசாரம், நம் இந்தியப் பண்பாடுகளுக்கு ஒத்துவராதது என்றெல்லாம் கூக்குரலிட்டு எந்தப் பிரயோஜனமுமில்லை என்பதுதான் இன்றைய நிதர்சனம். அதற்காக, எப்படியோ போகட்டும் என்று விட்டுவிட முடியுமா? சற்று யோசித்து செயல்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எதையுமே தடுத்து நிறுத்தி நம் கண்டிப்பை வெளிப்படுத்துவதைவிட தட்டிக் கொடுத்து, புரியவைத்து, நம் வழிக்குத் திருப்புவது நாம் எதிர்பார்க்கும் பலனைத் தரும் என்பது பலரின் அனுபவ உண்மை.

பாரத தேசத்திற்கு, நாள் தோறும் ஆன்மிகம் சார்ந்த, கலாச்சாரம் சார்ந்த, குடும்பம் சார்ந்த கொண்டாட்டங்கள் இருக்கின்றன. நமக்குத் தேவையில்லை தான் இந்த மேற்கத்திய கொண்டாட்டங்கள் உண்மையில் அயல்நாட்டினருக்கு ஆண்டுதோறும் கொண்டாடுவதற்கு எதுவுமில்லை. அதனால் எதை எதையோ கொண்டாடிவருகிறார்கள். அவர்களது பார்வையில் அது தவறுமில்லை. சந்தோஷமாக இருப்பதற்கு சந்தர்ப்பங்கள் தேடுகிறார்கள். நம் தேசம் அனைத்திலும் நிறைவடைந்த தேசம். போதும் போதும் என்று நினைக்கும் அளவிற்கு கொண்டாட்டங்கள் இருக்கின்றன. அப்பாடா! கொஞ்சநாள் நிம்மதியாக இருக்க மாட்டோமா என்று அமைதியை நாடும் தேசமாக இருக்கிறது.

ஒரு சில நாடுகளுக்குப் போய்வந்த, வாழ்ந்துவந்த, கவனித்துவந்த அனுபவத்தில் சொல்கிறேன். வாலண்டைன் டே நாம் நினைப்பது போல் எல்லைகள் மீறிய தினமாக அங்கே கொண்டாடப் படுவதில்லை. அவர்கள் அழகாக அன்பைப் பரிமாறிக் கொள்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் ஆசிரியர்களின் ஒப்புதலோடு, மேற்பார்வையோடு பண்பாக பாசத்தைப் பரிமாறிக் கொள்கிறார்கள். இங்கே நாம் நினைப்பது போல் அது காதலர் தினமாக மட்டும் கொண்டாடப்படுவதில்லை. கூட்டுக் குடும்ப முறை இல்லாத சூழலில் அன்றைய தினத்தில் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கும் பிள்ளைகளும், பெண்களும், பேரன் பேத்திகளும், சகோதர சகோதரிகளும் இன்னும் பிற உறவினர்களும் அன்பின் சின்னமான அழகிய பூங்கொத்துக்களைக் கொடுத்து மகிழ்கிறார்கள்.



கணவனுக்கு மனைவி, மனைவிக்கு கணவன், சகோதரனுக்கு சகோதரி, சகோதரிக்கு சகோதரன், ஆசிரியருக்கு மாணவன், மாணவர்களுக்கு ஆசிரியர்கள், நண்பனுக்கு நண்பன், சிநேகதிக்கு சிநேகிதி என்று அனைவரும் 'வாலண்டைன் வாழ்த்து அட்டைகள் பரிமாறிக் கொள்கிறார்கள். அந்த வாழ்த்து அட்டைகளில் உணர்வு பூர்வமான அழகிய வார்த்தைகளில் அன்பை வெளிப்படுத்தி இருப்பார்கள். என்னுடைய பேரன் பேத்திகள் கூட (8வயது, 12வயது) ரகசியமாய் வாலண்டைன் வாழ்த்து அட்டைகள் தயாரித்து அழகிய ஒற்றை ரோஜாவுடன் எனக்கு வழங்கிவிட்டு கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டபோது மனம் உருகித்தான் போனது.

வாலண்டைன் தினத்தை 'காதலர்கள் தினம் என்கிற குறுகிய வட்டத்திற்குள் அவர்கள் சிறை பிடிக்கவில்லை. பரந்த மனத்துடன் மனிதர்கள் அனைவரையும் நேசிக்கும் அன்புப் பரிமாற்ற தினமாகத்தான் கருதுகிறார்கள். விகல்பங்களோ, வக்கிரங்களோ அவர்கள் மனதில் இருப்பதாக எனக்கு தெரியவில்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக நடப்பதை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்த தினம் என்று இல்லை. எதையும் அவர்கள் மேற்கத்தியர்கள் அளவுக்குமீறி உணர்ச்சிவசப்பட்டுக் கொண்டாடுவதில்லை.

நாம் தான் இங்கே, நடிகனின் அட்டைக்குக் கூட பைத்தியம் பிடித்தாற்போல் பால் அபிஷேகம் செய்துகொண்டிருக்கிறோம். சமீப காலங்களாக இங்கே எல்லாமே அபரிமிதமாகப் போய் கொண்டிருக்கிறது. வாங்குவது, உண்பது, கொண்டாடுவது, கோபப்படுவது என்று எதிலும் நிதானம் இல்லை. வாங்குவதின் உச்சத்தை கடைகளில் பார்க்கலாம். உண்பதின் உச்சத்தை சாலையோர சிற்றுண்டி வாகனத்திலிருந்து ஸ்டார் ஹோட்டல்கள் வரை பார்க்கலாம். கொண்டாடுவதின் உச்சத்தை கட்டவுட்களிலும், கல்யாண மண்டபங்களிலும் பார்க்கலாம். கோபப்படுவதன் உச்சத்தை அன்றாட செய்திதாள்களில் இடம்பெறும் கொலை வெறிகளில் பார்க்கலாம். நாம் எல்லாவற்றிற்கும் அதீதமாக உணர்ச்சிவசப்படுகிறோம். இதன் ஒரு வெளிப்பாடுதான் இளைஞர்களின் இந்த உச்சபட்ச கொண்டாட்டங்கள்.

இச்சூழலின் உஷ்ணத்தை எப்படி சமாளிப்பது? எடுத்துக் சொல்வோம் நம் குழந்தைகளுக்கு, வழிகாட்டுவோம் அடுத்த தலைமுறைக்கு எப்படி?

பிப்ரவரி 14 'வாலண்டைன்ஸ் டே! பெரியோர்களாகிய நமக்கு சம்பந்தமில்லை என்று ஒதுங்காமல், பெரிசுகள் திட்டித்தொலையும் என்று அவர்கள் நம்மைத் தவிர்த்து, ரகசிய கொண்டாட்டங்களில்

ஈடுபட நாம் வழிவகுத்து விடாமல், நாமே அன்பை விதைத்து, அன்பை அறுவடை செய்வோம். எப்படி? ஒரு உதாரணம் பாருங்கள்.

இந்தாங்கோ எல்லோரும் ஸ்வீட் எடுத்துக் கோங்கோ என்று அல்வாவைக் கிளறி நீட்டுங்கள் இளைய தலைமுறையிடம்.

என்ன விசேஷம் இன்னிக்கு? உங்களுக்கு பொறந்தநாளா? என்று கேட்பார்கள். பொறந்தநாளும் இல்ல, ஒண்ணுமில்ல. வாலண்டைன் டே-ங்கறாளே அதுதான் இன்னிக்கு உங்களுக்கெல்லாம் நினைவில்லையா? உலகமே கொண்டாடுமாமே! நாமும் கொண்டாடுவோம். சந்தோஷமா இருப்போம். அன்பை வெளிப்படுத்தணும், அது என்னிக்கா இருந்தா என்ன? உலகத்தோட ஒத்துப் போயிடுவோம். அவா வழியில் அவா கொண்டாடட்டும். நம்ம வழியில நாம கொண்டாடுவோம். இன்னிக்கு நம்ம ஆத்துக்கு யார் வரபோறா தெரியுமா? என்று கொக்கிக் கேள்வியைப் போட்டு நிறுத்தினாள் விசாலம் மாமி. குடும்பத்தினர் புரியாமல் பார்த்தார்கள்.

- மீனா அத்தையும் அத்திம்பேரும்!

- நிஜமாவா? அவாதான் நம்ம அப்பாகூட சண்டை போட்டு, இந்த வீட்டு படியையே மிதிக்க மாட்டேன்னு சொல்லிட்டு போயிட்டாளே. நம்மாத்து விசேஷங்களுக்கு எதுவும் நீ கூப்பிட்டும் வரலியே? எப்படி ஒத்துண்டா? நீ கூப்பிட்டியா?

“பழைய கதை பேசப்படாது. அன்பா கூப்பிட்டேன் அவாளும் அன்பா ஒத்துண்டா அவா வர்ற நாள் ஒரு ஞாபகமா இருக்கட்டும். இப்படி அன்பை விதைக்கிற நாளா இதை நாம் ஒவ்வொரு வருஷமும் கொண்டாடுவோம். அடுத்த வருஷம் புதுசா நீங்க யோசிச்சு சொல்லணும் சரியா?

இப்பவே சொல்றேம்மா நாம் எல்லோருமே சீனு தாத்தா பாட்டியை அவர் ஊர்ல போய் பார்க்கலாம் என்ற பேரனை குறும்பாகப் பார்த்து “ஏண்டா, அங்க டாய்லட் வசதி இல்லை, சாக்கடை நாத்தம் குடலைப் பிடுங்கிறதுன்னு வானத்துக்கும் பூமிக்கும் குதிச்சியே மறந்து போச்சா?

இல்ல பாட்டி. பாவம் தனியா இருக்கா, நாம போனா சந்தோஷமா இருப்பாளே.

புரிஞ்சா சரி. ஒவ்வொரு வாலண்டைன் டே-யையும் இப்படி குடும்பமா கொண்டாடுவோம்.

**அன்பை விதைப்போம் அன்பையே அறுவடை செய்வோம்**. அது வாலன்டைன் டே யாக இருந்தால்தான் என்ன? திசை மாறிவிடாமல் இளைய தலைமுறையை இழுத்து பிடிப்போம். பாசக்கயிற்றை வீசி ஹாப்பி வாலண்டைன்ஸ் டே!

சரி, படிச்சதும் இதுமாதிரி ஒரு திட்டம் போட்டு நடத்திக் காட்டி உங்களோட அனுபவத்தை எழுதுங்கோ பார்க்கலாம். சிறந்த அனுபவத்திற்கு ஒரு பரிசு கொடுத்துட்டா போச்சு.

**- டாக்டர். ஷ்யாமா ஸ்வாமிநாதன்**




# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

**மணிமங்கலம், தாம்பரம், சென்னை**

CODE 1405

**பாடப்பிரிவுகள்:**

**இளநிலை (பி.இ.)**

MECHANICAL, CIVIL, CSE, ECE, EEE

**கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்**

**வளாக கட்டமைப்பு: கல்லூரி வளாகம் பசுமைச் சூழலில் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தனித்தனி வளாக கட்டமைப்பை தன்னுள்ளே கொண்டுள்ளது.**

**சிவனடியார்கள் குடும்பக் குழந்தைகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்.**



டாக்டர். **வி.பி.இராமமூர்த்தி.** பிஎச்.டி.
நிறுவனம் மற்றும் கல்லூரி தலைவர்
மேனாள் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்

# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

டாக்டர். வி.பி.ஆர். நகர், மணிமங்கலம், தாம்பரம்,
சென்னை – 601 301, தமிழ்நாடு

**Ph : 9 283 283 283 / 72 9999 6789 / 98416 55959**

**044 - 71 700 801 / 803 / 2436 3321.**

**www.dce.edu.in**

G. SIVAGAMASUNDARI
99940 89133



N. GURUMURTHY
99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**


# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

*14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,*
*லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*

செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **19.02.2019 செவ்வாய்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# திருக்கோயில் உழவாரப்பணி

**03.02.2019, ஞாயிற்றுக்கிழமை**

**கொளப்பாக்கம்**

**அருள்மிகு ஆனந்தவள்ளி உடனுறை அகத்தீஸ்வரர்**

**திருக்கோயில் (சூரியன் கிரக பரிகாரத்தலம்)**




ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

**பசுமை**

ஆர்கானிக் & நேச்சுரல்ஸ்

நெ. 5B/4, 7வது குறுக்கு தெரு, தண்டீஸ்வரம், வேளச்சேரி,
சென்னை - 600 042. (தினத்தந்தி அலுவலகம் அருகில்)

**044-42325018**

**இயற்கையாக விளைவிக்கப்பட்ட காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்கள்**

**செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கிடைக்கும்**

**நாட்டு பசும்பால், பாரம்பரிய அரிசி வகைகள் சிறுதானியங்கள், மரச்செக்கு எண்ணெய், தேன் இரசாயணமற்ற அழகு சாதன பொருட்கள் மூலிகை பொடிகள், மூலிகை டீ மற்றும் எண்ணற்ற இயற்கை பொருட்கள் இங்கு கிடைக்கும்.**


# ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

## அன்றாடம் அக்குபிரஷர்

### அக்குபிரஷர் வரலாறு

நமது உடம்பில் நரம்புகள் எல்லா உறுப்புகளிலும் பரவியுள்ளன. இந்த நரம்புகளின் கடைசிப் பகுதியை அக்கு என்பார்கள். இந்த அக்கு, புள்ளிகளில் கொடுக்கப்படுகிற அழுத்தத்தை அக்குபிரஷர் எனவும், அக்குபுள்ளிகளில் ஊசிகளைக் கொண்டு குத்தினால் அக்குபஞ்சர் எனவும் கூறப்படுகிறது.

உடலின் தசைகளை இயக்குவது நரம்புகளின் வேலையாகும். இதை கருத்தில் கொண்டு நமது முன்னோர்கள், நம் உடலின் பாகங்களில் சில மர்மப் புள்ளிகள் உள்ளன என்று கண்டுபிடித்திருந்தார்கள். இந்த புள்ளிகளை நம் நாட்டில் வர்மப் புள்ளிகள் எனவும், சீனர்கள் அக்குபஞ்சர் புள்ளிகள் எனவும் பெயரிட்டனர்.

அக்குபஞ்சர் புள்ளிகளில் விரலினால் அழுத்தி அல்லது ஊசியால் குத்தி உடலிலுள்ள நரம்புகளையும், தசைகளையும் மறத்துப் போகச் செய்யவும் அவைகளின் செயல் திறனை ஊக்குவிக்கவும் முடியும் என்றும் கண்டுபிடித்தார்கள். இந்த முறைகளின் மூலம் நோய்களை குணமாக்கும் வைத்திய முறையே அக்குபஞ்சர் வைத்திய முறை என்றழைக்கப்படுகிறது.

இன்றைய பிரபல குங்பூ, கராத்தே, ஜூடோ என்று படிப்படியாக வளரும் சண்டைப் பயிற்சிகள், அக்குபஞ்சர் என்று மருத்துவ முறையிலிருந்து தோன்றியதே ஆகும்.

டாக்டர் S.K.**மீனா வாசுகி**
Acupuncture Specialist, Yoga & Varma Healer